# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),

Egmore, Chennai – 600 008.

Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377

Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 93/2016**

திருமதி. M.S. சுஜாதாலட்சுமி,
க/பெ ஜெ. ரங்கநாதன், B.Com., B.L.,
பிளாட் எண்.41, இந்திரா நகர் விரிவாக்கம்,
தாராபடவேடு, செங்குட்டை,
காட்பாடி – 632 007,
வேலூர் மாவட்டம். ......மேல்முறையீட்டாளர்

எதிர்

செயற்பொறியாளர் / இ & ப
காட்பாடி,
வேலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10வது கிழக்கு பிரதான சாலை,
காந்தி நகர், வேலூர்–632 007. ......எதிர்மனுதாரர்

**ஆணை எண்.25. 4.2017**

1. திருமதி. M.S. சுஜாதாலட்சுமி, க/பெ ஜெ. ரங்கநாதன், B.Com., B.L. இந்திரா நகர் விரிவாக்கம், காட்பாடி, வேலூர்அவர்களின் 9.11.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண் 93/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல்முறையீட்டாளர் காட்பாடி, தாரபடவேடு, செங்குட்டை, இந்திரா நகர் விரிவாக்கம், சர்வே எண்.330/5 மனைபிரிவில் மனை எண்.41ல் வீடுகட்டுவதற்காக தற்காலிக மின்இணைப்பு எண்.212–005–2629ஐ வீதப்பட்டி VIல் 31.01.2015 அன்று பெற்றுள்ளார்.

3. மேற்கண்ட மின்இணைப்பினை வீதப்பட்டி VI-லிருந்து வீட்டு உபயோகத்திற்கான வீதப்பட்டி IAஆக மாற்றுவதற்கு அந்த வீட்டின் மேல் உயர் அழுத்த மின்பாதை உள்ளதால் மறுக்கப்படுகிறது என்பது சம்பந்தமாக மேல்முறையீட்டாளர் 14.6.2016 மற்றும் 4.7.2016 ஆகிய நாட்களில் மனு செய்துள்ளார்.

4. மேலும், வேலூர் மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 30.8.2016 அன்று மனு செய்துள்ளார். மன்றம், மனுதாரரின் வீட்டின் மேல்பகுதியில் உயர் அழுத்த மின்பாதை செல்வதாலும் அதனை மாற்றி அமைக்காததாலும் அவரின் கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்துள்ளது.

5. மேற்கண்ட தீர்வின் மீது அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

6. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் செயற்பொறியாளர், காட்பாடி வேலூர் மின்பகிர்மான வட்டம் அவர்களுக்கு பதிலுரையை சமர்ப்பிக்கும்படி 22.11.2016 நாளிட்ட அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்பட்டது.

7. எதிர்மனுதாரர் தன்னுடைய 20.1.2017 நாளிட்ட பதிலுரையை சமர்ப்பித்துள்ளார்.

8. மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை 10.2.2017 அன்று நடைபெற்றது.

9. மேல்முறையீட்டாளரின் சார்பில் அவரின் கணவர் திரு. ஜெ. ரங்கநாதன் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

10. எதிர்மனுதாரர் திரு. ஆர். ரவி, செயற்பொறியாளர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

11. கேட்புரையில் விண்ணப்பதாரர் முன்னிலையில் கள ஆய்வு செய்து மின்பாதையை மாற்றி அமைக்க மதீப்பீடு செய்யும்படி எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டது.

12. எதிர்மனுதாரர், 10.4.2017 நாளிட்ட அறிக்கையில் மேல்முறையீட்டாளர் மின்பாதையை மாற்றியமைக்க மதிப்பீட்டு கட்டணம் ரூ.32050/–ஐ 27.3.2017 அன்று செலுத்தியுள்ளார் என்றும் அவரின் மின்இணைப்பு எண்.212–005–2629ன் வீதப்பட்டியல் (Tariff) 1.4.2017 அன்று வீதப்பட்டியல் VI லிருந்து IAக்கு மாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

13. மின் கணக்கீடு வீதப்பட்டியல் மாற்றம் செய்யப்பட்டு விட்டது என்று மேல்முறையீட்டாளர் மின் குறைதீர்ப்பாளருக்கு தெரிவிக்கும் 6.4.17 நாளிட்ட கடிதத்தையும் எதிர்மனுதாரர் சமர்ப்பித்துள்ளார். மேற்கண்ட கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்தி கடிதத்திலுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“விடுநர்*
*M.S. சுஜாதாலட்சுமி, 9444843979*
*க/பெ ஜெ. ரங்கநாதன், B.Com., B.L.,*
*Plot No.41, இந்திரா நகர் விரிவாக்கம்,*
*தாராபடவேடு, செங்குட்டை, காட்பாடி 632 007*
*வேலூர் மாவட்டம்.*

*Katpadi*
*06–04–2017*

*பெறுநர்*
*மின்குறைதீர்ப்பாளர் அவர்கள்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,*
*19, ருக்மணி சாலை, (டிட்கோ காம்ப்ளஸ் எழும்பூர்),*
*சென்னை – 600 008.*

*ஐயா, வணக்கம்,*

*பொருள்– புதிய வீட்டின் வர்த்தக இணைப்பு எண்.212–005–2629யை வீட்டிற்கான மின்இணைப்பு மாற்றி தரவேண்டி தங்களிடம் அளிக்கப்பட்ட மேல்முறையீடு மனு சம்பந்தமாக.*

*********

*புதிய வீடு கட்டுவதற்காக பெறப்பட்ட வர்த்தக மின்இணைப்பு எண்.212–005–2629யை வீட்டு மின்இணைப்பு மாற்றம் செய்து தரவேண்டி தங்களிடம் மேல்முறையீடு செய்யப்பட்டது. அதற்காக தங்கள் அலுவலக க.எண்.93/2016 /அ.எண்.108/2016/13.01.2017 ஆம் தேதி கடிதபடி கடந்த 14.2.2016 ஆம் நாளன்று தங்கள் முன்பு விசாரணை நடைபெற்றது. அதன்படி மேற்படி விலாசத்தில் பெறப்பட்டுள்ள வர்த்தக மின்இணைப்பு 01.04.2017 அம் தேதியன்று வீட்டின் மின்இணைப்பாக்கி கட்டணம் மாற்றம் செய்துள்ளதை தங்களின் மேலான பார்வைக்கு இதன் மூலம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*நன்றி*

*இப்படிக்கு*
*Sd/xxxx xxxx ”*

14. மேற்கண்ட கடிதத்தை கூர்ந்து படிக்கும்பொழுது இந்த மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான மின்இணைப்பு எண்.212–005–2629ன் வீதப்பட்டியல் மாற்றம் 1.4.2017 அன்று செய்யப்பட்டுள்ளது என்று தெரிகிறது.

15. இந்த மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான மின்இணைப்பு எண்.212–005–2629ன் மின்கட்டணத்தை வீதப்பட்டியல் VI –லிருந்து IA–க்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேறிவிட்டதால் அவரின் மேல்முறையீட்டு மனு எண்.93/2016 இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திருமதி. M.S. சுஜாதாலட்சுமி,
க/பெ ஜெ. ரங்கநாதன், B.Com., B.L.,
பிளாட் எண்.41, இந்திரா நகர் விரிவாக்கம்,
தாராபடவேடு, செங்குட்டை,
காட்பாடி – 632 007,
வேலூர் மாவட்டம்.

2) செயற்பொறியாளர் / இ & ப
காட்பாடி,
வேலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10வது கிழக்கு பிரதான சாலை,
காந்தி நகர், வேலூர்–632 007.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர் ),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
வேலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10வது கிழக்கு பிரதான சாலை,
காந்தி நகர், வேலூர்–632 007.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.